செய்தி வெளியீடு எண். 108 நாள். 20.02.2018

**உரிமம் இல்லா உணவு நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் – மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப, அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து உணவுப் பொருள் வணிகர்களும் உரிமம் மற்றும் பதிவு பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் உடன் உரிமம் / பதிவு பெற்று தொழில் புரிய வேண்டும்.

வணிக நிறுவனங்களில் உள்ள ஒரு உணவுப் பொருள் பொட்டலங்களில் கட்டாயம் உரிமம் / பதிவு எண் இருக்க வேண்டும். உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யும் அனைத்து வணிகர்களும் தங்களது உரிமம் / பதிவு புதுப்பித்தல் சரியான தேதிக்குள் செய்ய வேண்டும். புதுப்பித்தல் மற்றும் உரிமம் / பதிவு பெறாதவர்களுக்கு Sec63-ல் சட்டப்பூர்வ நோட்டீஸ் வழங்கப்படும் எனவும் நுகர்வோர் நலன் கருதி தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள் வணிகர்கள் www.fssai.gov.in என்ற இணைய தள வழியாக Online Payment–ல் பணம் செலுத்தி உரிமம் / பதிவு பெற விண்ணப்பிக்கலாம். உணவுப் பொருட்கள் வணிகர்கள் பொது சேவை மையத்திற்கு (CSC) சென்று ரூ. 100/- வருடத்திற்கு வீதம் செலுத்தி பதிவு சான்று பெற்றுக் கொள்ளலாம். மேலும், இணையதள வழியாகவும் Online Payment -ல் செலுத்தி பதிவு செய்யலாம்.

உணவுப் பொருள் வணிகர்கள் வருடத்திற்கு ரூ.12,00,000-க்கு குறைவாக வணிகம் செய்பவர்கள் ரூ. 100-ம் வருடத்திற்கு ரூ. 12,00,000-க்கு மேல் வணிகம் செய்பவர்கள் ரூ.2000 வீதம் உற்பத்தியாளர்கள் 1 டன் அளவிற்கு ரூ.3000 வீதம் 2 டன் உற்பத்தியாளர்கள் ரூ.5000 வீதம், Online Payment-ல் பணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள் வணிகர்களுக்கு தற்பொழுது விழிப்புணர்வு அறிக்கை கொடுக்கப்பட்டு வருகிறது. விழிப்புணர்வு அறிக்கை பெற்று உரிமம் / பதிவு பெறப்படவில்லை என்றால் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006-ன்படி Sec63-ல் நோட்டீஸ் வழங்கி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால் அதனைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறது.

உணவுப் பொருளின் வணிகர்கள் சில்லரை கடைகள் / மொத்த விற்பனையாளர்கள், இருப்பு வைப்பவர்கள், மார்க்கெட்டிங் செய்பவர்கள், சப்ளை செய்பவர்கள், கேட்டரிங் செய்பவர்கள் உற்பத்தியாளர்கள், மறு பொட்டலிடுபவர்கள், மறு விபரச் சீட்டு ஒட்டுபவர்கள் மற்றும் டிரேன்ஸ் போர்ட்டர்கள், இறைச்சி, மீன் கடைகள், திருமண மண்டபங்கள், காய்கறி கடைகள், உணவு விடுதிகள் உள்ள கல்லூரி, பள்ளிகள், தொழிற்சாலைகள் என உணவு தொழில் புரியும் அனைவரும் தங்களது விற்று கொள்முதலுக்கு ஏற்ப கட்டணம் செலுத்தி உரிமம் / பதிவு பெற்று உணவு வணிகம் மேற்கொள்ள வேண்டும்.

உணவுப் பொருள் வணிகர்கள் தங்களது உரிமம் / பதிவு காலாவதி ஆகும் 30 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பித்து பதிவு / உரிமம் புதுப்பிக்க வேண்டும். உணவுப் பொருட்கள் வணிகம் செய்ய விரும்புபவர்கள் முன்னதாகவே விண்ணப்பித்து உரிமம் / பதிவு எண் பெற்றும் வணிகம் தொடங்கவும், உணவுப் பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் தங்களது அடைக்கப்பட்ட உணவுப் பொருட்களில் கட்டாயம் fssai உரிமம் / பதிவு என தெளிவாக நுகர்வோர் அறியும் வகையில் இருக்க உறுதி செய்ய வேண்டும்.

உணவுப் பொருட்கள் வாங்கும் நுகர்வோர் தாங்கள் வாங்கும் பொருட்களில் fssai Logo மற்றும் fssai உரிமம் / பதிவு எண், உணவுப் பொருளின் பெயர், முகவரி, ஊட்டச்சத்து விவரம், பேட்ஜ் எண், காலாவதி தேதி மற்றும் விலை விவரம் உள்ளதா என பார்த்து உணவுப் பொருட்கள் வாங்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பிரதிவாரம் திங்கள் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை உணவு பாதுகாப்பு மாவட்ட நியமன அலுவலகம், எண்.54/5, ஆசூரி தெரு, துணை இயக்குநர் (பொது சுகாதாரம்) அலுவலக வளாகம், திருவள்ளூர் என்ற முகவரியில் உணவு உரிமத்தை விண்ணப்பித்தவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபர் மூலமாக பெற்றுக்கொள்ளலாம். மேலும், விவரங்களுக்கு 044-27662002 என்ற தொலைபேசி எண்ணிற்கும் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**